## நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்திக் கம்பனி - 2022

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்திக் கம்பனியின் (“கம்பனி”) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்று உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆளுகைத் தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது

நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் கம்பனியின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க கம்பனி செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள்

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அ. | 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் பிரிவு 5(1) இன் படி கம்பனி ஊழியர்களுக்கான எதிர்கால பணிக் கொடையானது கணிப்பிடப்பட்டு இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் படி கம்பனியினால் ஏற்பாடு செய்யப்படவில்லை. | பணிக்கொடை ஏற்பாட்டினை 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனி ஊழியர்களுக்கான பணிக்கொடை ஏற்பாடானது வருடாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| ஆ | இலங்கை கணக்கீட்டு நியமம் 38 இன் படி கம்பனிப் பயன்பாட்டுக்காக வடிவமைக்கப்பட்ட கட்டிட முகாமைத்துவ மென்பொருளின் பெறுமதியானது இனங்காணப்பட்டு அருவச் சொத்துக்களின் கீழ் தனியாக காட்டப்படாது கட்டிடப் பெறுமதியினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது | குறித்த கிரயத்தினை இனங்காண்பது கடினமானது ஆயினும் இக் கிரயத்தினை இனங்காண்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும் | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படி அருவச் சொத்துக்கள் தனியாக இனங்காணப்பட வேண்டும் |
| இ. | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பகுதி 7 இன் படி நிறுவனத்தினால் எதிர்கால பொருளாதார பயன்களை பெற்றுக் கொள்ள முடியாததாயின் அதனை நிறுவனத்தின் சொத்தாக இனங்காண முடியாது. இதற்கு முரணாக கம்பனியினால் குறித்த மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4.96 மில்லியன் பெறுமதியான 5 சொத்துக்கள் ஆதனம் பொறி உபகரணத்தின் கீழ் சொத்துக்களாக உள்ளடக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இச் சொத்துக்கள் கம்பனியினால் பயன்படுத்தப்படாது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் கம்பனியானது குறித்த மீளாய்வாண்டில் தேய்மான ஏற்பாடாக ரூபா 826,0000 இனை மேற்கொண்டிருந்தது. | கை டிராக்டர், டிரெய்லர் பவுசர் ஆகியவற்றை டெண்டர் மூலம் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதோடு, டபே டிராக்டர், புல்வெட்டும் இயந்திரம் ஆகியவற்றை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு குத்தகைக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படி சொத்துக்கள் சரியாக இனங்காணப்பட வேண்டும் |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அ. | முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்டு நிறுவனத்தின் பயன்பாட்டிலுள்ள 21.90 மில்லியன் கிரயமான ஆதனம் பொறி உபகரணங்கள் மற்றும் அருவ சொத்துக்களினை முறையே இலங்கை கணக்கீட்டு நியமம் 16 மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் 38 இன் படி மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் படி பயன்தரு ஆயுட்காலத்தினை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் அவற்றின் பெறுமதிகளை இனங்கண்டு வகைப்படுத்திய பின்னர், பட்டய மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு அறிக்கையைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. | முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான நடவடிக்கைகள் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படி மேற்கொள்ளப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| ஆ. | மீளாய்வாண்டின் மார்ச் 31 இல், தகுதிவாய்ந்த மதிப்பீட்டாளரால் நிறுவனத்தின் முதலீட்டுச் சொத்தானது ரூ. 10,473.7 மில்லியன் நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்பட்டது. அவ் அறிக்கையின் படி நியாயமான பெறுமதி அதிகரிப்பு ரூ. 7,427.48 மில்லியனாகும். எவ்வாறாயினும், தேய்மானமானது முழு வருடத்திற்கும் கிரய அடிப்படையில் கம்பனியினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், நியாயமான பெறுமதி கணக்கிடப்பட்ட காலப்பகுதியானது நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளில் கம்பனியினால் வெளிப்படுத்தப்படவில்லை. மேலும், நியாயமான பெறுமதி அதிகரிப்பில் ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பினை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பெறுமதியானது கணக்குகளில் சரியாகக் காட்டப்பட்டுள்ளது. | நியாயமான பெறுமதியினை இனங்காணல் மார்ச் 31 அன்று நடைபெற்றமையினால், தொடர்புடைய தேய்மானக் கணிப்பீடுகள் சரிசெய்யப்படுவதோடு கணக்கீட்டு நியமம் 12 இன் படி நியாயமான பெறுமதி அதிகரிப்பில் ஒத்திவைக்கப்பட்ட வரி பொறுப்பு இனங்காணப்பட வேண்டும் |
| இ. | மீளாய்வாண்டின் இறுதியில் நிறுவனத்தின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பாகக் காட்டப்பட்டுள்ள ரூ.806.34 மில்லியனானது நகர அபிவிருத்தி அதிகாரசபையுடனான நடைமுறைக் கணக்கின் மீதியாகக் காட்டப்பட்டுள்ளது.<br>செத்சிரிபாய கட்டிடம் II இனை நிர்மாணிப்பதற்காக பெறப்பட்ட கடன் தொகையானது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது, ஆனால் தவணைக் கட்டணம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் கம்பனி வழங்கும் நிதியினால் மேற்கொள்ளப்படுகிறது. இது தொடர்பான வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படாததோடு கடன் மற்றும் வட்டிக் கொடுப்பனவு ஒப்பந்தம் எதுவும் செய்யப்படவில்லை. மேலும், நிதிநிலைமைக் கூற்றுத் திகதியிலிருந்து 12 மாதங்களுக்குள் தீர்க்கப்பட வேண்டிய ரூபா 323.39 மில்லியன் நடைமுறைப் பொறுப்பாகவும், மீதமுள்ள ரூபா 212 மில்லியன் ரூபா நடைமுறை அல்லாத பொறுப்பாகவும் இனங்காணப்படவில்லை. | இது 2023 ஆம் ஆண்டு முதல் கணக்குகளில் காட்டப்படும். | நிறுவனத்திற்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கும் இடையிலான கொடுக்கல்வாங்கல்கள் தனியாக காட்டப்படுவதோடு வங்கி கடன் பொறுப்பானது நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்பாக வகைப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் கடைசித் திகதியில், நிறுவனத்தின் "செட்சிறிபாய கட்டம் - II" கட்டிடத்தைப் பயன்படுத்துவதனால் அரச நிறுவனங்களிலிருந்து வருமதியான வாடகை வருமானக், வர்த்தகக் கடன்பட்டோர் மீதி ரூ.142.71 மில்லியனாக இருந்தது, அதில் ரூ.41.62 மில்லியன் 03 மாதங்களுக்கும் மேலாக நிலுவையில் இருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கடன்பட்டோர் மீதிகளினை முறையாக வசூலிக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| குறித்த சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 133(1)ஆம் பகுதி | கம்பனி உருவாக்கப்பட்ட திகதியிலிருந்து வருடாந்த பொதுக் கூட்டம் நடைபெறவில்லை. | வருடாந்த பொதுக் கூட்டத்தினை நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | கம்பனிச் சட்டத்தின் பகுதிகளுடன் இணங்க வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறு

மீளாய்வாண்டின் தொழிற்படு இலாபம் ரூ. 534,748,997 மற்றும் கடந்த ஆண்டின் இலாபம் ரூ. 534,433,968 ஆக இருந்தது. இதன்படி நிதிப் பெறுபேற்றில் ரூ. 315,029 ஆன சிறிய அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்புக்கான காரணம் வாடகை வருமானம் மற்றும் சேவை வருவயில் ஏற்பட்ட அதிகரிப்பானது முக்கிய தொழிற்பாட்டு செலவினங்களான மின்சார செலவு, இயந்திர பழுதுபார்ப்பு செலவு மற்றும் எரிபொருள் செலவு ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பினை விட அதிகமாக இருந்தமையாகும்.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| செலவினம் /வருமானம் | 2022 ரூபா | 2021 ரூபா | வித்தியாசம் ரூபா | வித்தியாசத்தின் சதவீதம் % |
|---|---|---|---|---|
| வாடகை வருமானம் | 466,361,096 | 448,241,745 | 18,119,351 | 4 |
| சேவை வருமானம் | 230,155,591 | 223,552,902 | 6,602,689 | 3 |
| திறைசேரி உண்டியல் மீதான வட்டி வருமானம் | 3,756,418 | 1,204,402 | 2,552,016 | 212 |
| மின்சார செலவு | 16,713,036 | 9,782,966 | 6,930,070 | 70 |
| இயந்திர பழுதுபார்த்தல் | 12,046,527 | 8,428,029 | 3,618,498 | 43 |
| எரிபொருள் செலவுகள் | 5,130,560 | 732,600 | 4,397,960 | 600 |
| சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி | 4,436,687 | ---- | 4,436,687 | 100 |
| வட்டிச் செலவு | 119,559,683 | 76,900,967 | 42,658,716 | 55 |

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

I. அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட வட்டியின் முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையிலான அதிகரிப்பானது திறைசேரி உண்டியல் மீதான வட்டி வருமான அதிகரிப்பை நேரடியாகப் பாதித்தது. மேலும், கடன்களின் சந்தை வட்டி விதங்களின் அதிகரிப்பு முக்கியமாக வட்டிச் செலவின் அதிகரிப்பைப் பாதித்தது.

ii. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் எரிபொருள் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு எரிபொருள் கட்டணங்கள் அதிகரிப்பு மற்றும் மின்சார விநியோகம் தடைபட்டதன் காரணமாக தொடர்ச்சியான மின்சார விநியோகத்திற்காக ஜெனரேட்டர்களை இயக்குவதற்கு எரிபொருளைப் பயன்படுத்த வேண்டிய தேவை என்பவற்றினால் ஏற்பட்டது.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

| **விகிதம்** | **2021** | **2022** | **வித்தியாசம்** |
|---|---|---|---|
| தேறிய இலாப விகிதம்- சதவீதம் | 53.81 | 61.99 | (8.18) |
| மொத்த சொத்துக்களின் வருவாய் சதவீதம் | 4.62 | 13.79 | (9.17) |
| கடன் மூலதன விகிதம் - சதவீதம் | 4.85 | 32.61 | (27.76) |
| வட்டி காப்பு விகிதம்- தடவை | 4.25 | 6.39 | (1.54) |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. வட்டிச் செலவினம், எரி பொருள் செலவு, மின்சாரச் செலவு மற்றும் பராமரிப்புச் செலவுகள் ஆகியவற்றின் அதிகரிப்பு காரணமாக கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் தேறிய இலாப வீதமானது குறைவடைந்துள்ளது.

ii. மீளாய்வாண்டில் கம்பனியின் முதலீட்டுச் சொத்துக்கள் நியாயமான பெறுமதியில் காட்டப்பட்டுள்ளமையால் தொடர்புடைய ஆண்டான 2021 உடன் ஒப்பிடும்போது வருவாய் சொத்துக்கள் விகிதம் மற்றும் கடன் மூலதன விகிதம் குறைவடைந்துள்ளது.

iii. வட்டிச் செலவின் அதிகரிப்பு காரணமாக வட்டிக் காப்பு விகிதம் தொடர்புடைய ஆண்டோடு ஒப்பிடுகையில் குறைவடைந்துள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் அமைப்பு அகவிதியின்படி, எந்தவொரு பகுதியிலும் வளர்ச்சித் திட்டங்களை வழிநடத்துவது, உருவாக்குவது மற்றும் மேம்படுத்துவது கம்பனியின் நோக்கமாகும், ஆனால் 2021-2024 காலப்பகுதிகளில் கம்பனியின் இந்த நோக்கத்தை அடைய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அமைக்கப்பட்ட கட்டடத்திலிருந்து வருடாந்த வாடகை மற்றும் சேவை வருமானத்தை வசூலிக்கவும், கட்டிடத்தை பராமரிக்கவும் மட்டுமே கம்பனியானது செயல்பட்டு வந்தது. | எதிர்காலத்தில் நிறுவனத்தின் பரந்த நோக்கங்களை நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கம்பனியின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு உன்னிப்பான கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனிக்கென பெறுகைக் குழுக்கள் எதுவும் நியமிக்கப்படவில்லை மற்றும் கம்பனியின் கொள்வனவுகள் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பெரிய அல்லது சிறிய பெறுகைக் குழுக்களால் செய்யப்பட்டது. | பொது முயற்சியாண்மை சுற்றறிக்கையின் படி துணைக் கம்பனிகளின் தீர்மானம் எடுக்கும் மற்றும் நிறைவேற்றதிகாரம் தாய்க் கம்பனியிடம் உள்ளது. | கம்பனி தனி அலகாக இருப்பதனால் கம்பனிக்கென பெறுகைக் குழுக்களை உருவாக்குவதற்கு தேவையான நடவடிக்கைக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 11 ஆந் திகதியிடப்பட்டபொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இன் பந்தி 5 (2) இன் படி, அடுத்துவரும் ஆண்டில் செயல்படுத்த எதிர்பார்க்கப்படும் செயற்பாடுகளை உள்ளடக்கிய செயற்றிட்டம், நிறுவனத் திட்டம்/வணிகத் திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான கம்பனித் திட்டத்தை சரியான முறையில் தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | நிறுவனத் திட்டம் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் படி தயாரிக்கப்பட வேண்டும் |